
கண்டவராயன்பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி.அபிராமி காந்தி சசிக்குமார்

செயல்முறை எண். 4 /2024 நாள் : 29. 2 .2024



பொருள் : மனையிடம் - குடியிருப்பு மனைப்பிரிவு - திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் - கண்டவராயன்பட்டி ஊராட்சி - கண்டவராயன்பட்டி கிராமம் - சர்வே எண். 31/7 மற்றும் 31/8-ல் உள்ள இடத்தில் 9050 சதுரமீட்டர் மனை பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இடத்திற்கு ஒப்புதல் வழங்குவது தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (M.A) நாள் : 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நாள் : 31.01.2020
2. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 04.05.2017 மற்றும் அரசாணை எண்.181 நாள் : 09.12.2020
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.320/2022 TCP.3 நாள் : 07.01.2022
4. மாவட்ட நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் தொழில்நுட்ப கடித எண். 05JTC93B/2024/TCP,dated : 10.02.2024 & 19.12.2023

உத்தரவு :

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கண்டவராயன்பட்டி ஊராட்சி கண்டவராயன்பட்டி கிராமத்தில் சர்வே எணகள். 31/7 மற்றும் 31/8-ல் கட்டுப்பட்ட 9050 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் சாலை ஒதுக்கீடு, மின்வாரிய ஒதுக்கீடு, பூங்கா மற்றும் ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடம் நீங்கலாக மனைப்பிரிவில் அமைந்துள்ள 6352.80 சதுரமீட்டர் பரப்பளவில் ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 29 மேற்படி மனையிட வரைபடத்திற்கு பார்வை (1)-ல் கண்டுள்ள சிவகங்கை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படியும் மனைப்பிரிவிற்கு கோரப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியும் மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளையும், பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடம் இவைகளை திருப்பத்தூர் சார்பதிவகம் 1 புத்தகம் ஆவண எண்.413/2024 பத்திரத்தின்படி கண்டவராயன்பட்டி ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்யப்பட்டு மேற்படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் மேற்படி அசல் ஆவணம் கண்டவராயன்பட்டி ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் தானமாக பதிவு செய்யப்பட்டு மின்வாரியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பார்வை (4)-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு ஒப்புதல் ROC.No.05JTC93B/2024/TCP,dated:10.02.2024-ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. (இறுதி ஒப்புதல் எண்.LP(SWP)DTCP/Sivagangai. No.10/2024) இதன்படி மனுதாரர் மனைப்பிரிவிற்கு கூராய்வுக் கட்டணம் ரூ.1000/- மற்றும் நிலப்பயன் கட்டணமாக நிலத்தின் மதிப்பில் 3% சதவிகிதம் படி (செண்டு 1-க்கு 1501 வீதம் 223.84 செண்டிற்கு நிலத்தின் மதிப்பு 2,37,700/-) தொகை ரூ.7,140/- Head of Account : (DPC:0217-60-800-AS-22709) கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

சிவகங்கை நகர் ஊரமைப்புத்துறையின் மனைப்பிரிவு ஒப்புதல் எண். LP(SWP)DTCP/Sivagangai.No.10/2024-ன்படி மேற்படி மனைப்பிரிவு ஊராட்சி ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகள் (மனை எண்.1 முதல் மனை எண்.29 வரை மொத்த மனைகள் 29-க்கும்) நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுக்கு இதன் மூலம் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

தலைவர்,
கண்டவராயன்பட்டி ஊராட்சி,

தலைவர்
கண்டவராயன்பட்டி ஊராட்சி
திருப்பத்தூர் ஒன்றியம்.

இணைப்பு :
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

நகல் :

1. சார்பதிவாளர், திருப்பத்தூர்.
   சார்பதிவாளர் அலுவலகம்,
   சிவகங்கை மாவட்டம்.
2. ரவிச்சந்திரன்,
   த./பெ.சின்னையா
   கணேஷ்நகர், திருப்பத்தூர்
3. Chairperson, TamilNadu Real Estate Regulatory Authority
   (TNRERA) CMDA Tower II Ist Floor No.1A
   Gandhi Irwin Bridge Road,
   Egmore. Chennai 600 008
4. வட்டாட்சியர்
   திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம்,
   சிவகங்கை மாவட்டம்.